1981 பிப்ரவரி 27]

என்பது. இதன் மூலம் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு வீண் செலவும், வீணாக நேரத்தைச் செலவழிக்கக்கூடிய குறைபாடுகளும் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகள், இந்த அலுவலகங்கள் மாநிலத் தலைநகரத்திலே இருப்பதால் ஏற்படுகின்றன. இதனால், திறன் வாய்ந்த மேற்பார்வை (Effective supervision) என்ற பணியிலும் குறைபாடுகள் ஏற்படுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் இந்த இரண்டு அலுவலகங்களை மாற்றியமைத்தாலும்கூட, இன்னும் சில அலுவலகங்களை மாற்றியமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துச்சொல்லிய, "ரெபடிஷன் ஆஃப் மார்ச்சஸ்", அதாவது சரியான முறையிலே மேற்பார்வை செய்யமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. அதுபோலவே ஊரகச் சாலைகள் திட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தை உடனடியாக சேலத்திற்கும், அதே நேரத்தில் இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் அலுவலகத்தை திருச்சிராப்பள்ளிக்கும் மாற்றியிருக்கிறார்கள். மொத்தம் ஒன்பது கண்காணிப்பு நிறுவனங்கள் சென்னையிலேயே இருக்கின்றன. அதிலே இரண்டு மட்டும் மாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் ஏழு நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த ஏழிலே ஒரு சில கண்காணிப்புப் பொறியாளர் வட்ட அலுவலகங்களை மாவட்டத் தலைநகரங்களுக்கே மாற்றலாமா என்பது பரிசீலனையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கண்காணிப்புப் பொறியாளர்களும், அவர்களின் அலுவலர்களும் பல காரியங்களைப் பார்க்கவேண்டிய சூழ்நிலைகள் இருப்பதால், பல சாலைகள் பராமரிக்கப்படமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதன் காரணமாக, அவர்களுடைய ஜூரிஸ்டிக்ஷனை இன்னும் குறைத்துக் கொடுக்க வேண்டும். ஆகவே இன்னும் கண்காணிப்புப் பொறியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாமா என்பது அரசினுடைய யோசனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவி.

*** 91 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவிக்கு, நேரடி நியமனத்திற்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க வகை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) ஊராட்சி வளர்ச்சித் துறையில் எல்லா நிலைகளிலும் தேக்க நிலை இருப்பதால் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவிக்கு நேரடி நியமனத்திற்கென ஏதும் தனி ஒதுக்கீடு செய்வது விரும்பத்தக்கதல்ல. ஆகவே இதுபற்றி இப்போது பரிசீலிக்கும் உத்தேசமில்லை.

Sale of Vegetables etc. on Platforms

* 92 *Q.*—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether permission has been granted by the Corporation of Madras for the sale of vegetables, fish and meat on roads and roadside platforms ; and

(*b*) if so, the names of such places ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சைதாப்பேட்டை கூட்டுறவு மீன் விற்பனை சங்கத்திற்கு அண்ணாநகர் 3-வது அவின்யூவில் நகராட்சிக்கு சொந்தமான ஓர் இடத்தில் ஒரு மீன் அங்காடி நடத்த மூன்று வருட காலத்திற்கு மாநகராட்சி அனுமதியளித்துள்ளது. இதைத்தவிர ரோடுகளிலோ தெரு ஓர நடைபாதைகளிலோ காய்கறி, மீன் இறைச்சி விற்பதற்கு நகராட்சியில் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : மாநகராட்சியினுடைய அனுமதி யாருக்கும் வழங்கப்படவில்லை என்று சொன்னாலும், சாலையோரங்களிலே நிரந்தரமாகக் கடைகள் வைத்துக்கொண்டு மீனையும், இறைச்சியையும், காய்கறிகளையும் விற்கின்ற நிலைமை தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. லாயிட்ஸ் ரோடு போன்ற பல்வேறு பகுதிகளிலே கடைகள் வைப்பதற்கு அனுமதி வழங்கவில்லை என்றாலும், அந்தப் பகுதிகளைத் துப்புரவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் காரணத்திற்காக மாநகராட்சி அந்தப் பகுதிகளைத் துப்புரவாக வைத்துக்கொள்கின்ற பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளாமல், அந்த இடங்களில் உள்ள பொதுவான கழிப்பிடங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா ? அதற்கு ஏற்ற வகையில் மாநகராட்சிக்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபோன்ற நிலைமைகள் பல பகுதிகளில் இருக்கின்றன. குறிப்பாக, தெருவோரக் கடைகள் என்று வைத்து விடுகிறார்கள். அப்புறப்படுத்தினாலும் கூட, அந்த நேரத்தில், உடனடியாக